# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தம்)

***2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, சனவரி மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, சனவரி மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***238 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : *ரூபா 12.00*** **தபாற் செலவு : *ரூபா 150.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

***வாசகம் 2*** : *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2024, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுக்கான பதிவின் மொத்த விற்பனை வரவின் தொடக்கநிலையை ஆண்டொன்றுக்கு நூற்றி இருபது மில்லியன் ரூபாவிலிருந்து அறுபது மில்லியன் ரூபாவாகக் குறைப்பதற்கானதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம் முதன்மைசக் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் பிரிவு 4 இற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதுமாகும்.*

## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தம்)

ச.வ.- ஒ. 70/2023

### 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப் பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப்பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:- 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) 2024, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டுக்காக, எந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்குப் பந்தி (அ) ஏற்புடையதாவதில்லையோ அந்த வரிவிதிக் கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனைவரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்;"; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக, ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து அல்லது தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப் பகுதியொன்றிற்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "இயைபான காலாண்டின் நேர்முற்போந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளின் போதும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2024, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் இயைபான காலாண்டின் நேர்முற்போந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளின் போதும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து; அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப் பகுதியொன்றிற்காக, அத்தகைய பதிவுசெய்யப் பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து,".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.